MAY 2024 **P/ID 35317/PTL2G**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. நாலடியார் – இதிலுள்ள ஆர் விகுதியின் பொருள் யாது?

2. கருணையின் பண்பு என்ன?

3. தறுகண் – பொருள் கூறுக.

4. திறலார் என்போர் எத்தகையோர்?

5. 'பழத் தெங்கு' என்பது யாது?

6. நான்மணிக்கடிகை – பொருள் சுட்டுக.

7. நான்முகன் – யார்?

8. மயரிகள் என்று இனியவை நாற்பது யாரைச் சுட்டுகிறது.

9. வண்மை – சொற்பொருள் சுட்டுக.

10. எது இகழ்ச்சி என்று ஆத்திசூடி கடிகிறது?

11. நுப்போல் வளை – பொருள் கூறுக.

12. பேதைமை என்பது யாது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. நாலடியாரைத் திருக்குறளோடு ஒப்பிட்டு ஆராய்க.

14. நாலடியார் தொகை நூலா? விவாதிக்க.

15. பழமொழிகள் அறநெறிக் களஞ்சியங்களாகத் திகழுமாற்றை நிறுவுக.

16. கற்றலின் கேட்டலே நன்று என்று பழமொழி கூறுவதை விளக்குக.

17. வெல்ல வேண்டின் வெகுளி விடுக என்று கடிகை அறிவுறுத்துவது யாது?

18. பசிவரப் பத்தும் பறந்துபோகும் – விவரிக்க.

19. அட்டாலும் பால் சுவை குன்றாது என்று அவ்வையார் உரைப்பது என்ன?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்கட்கு, 500 சொற்களில் விடையெழுதுக.

20. நாலடியாரில் திருக்குறள் கருத்துகள் இடம்பெறுமாற்றை எடுத்துரைக்க.

21. கல்வியின் சிறப்பை அற நூல்கள் வழித் தெளிவுறுத்துக.

22. செய்யத்தகாதனவாக இன்னா நாற்பது கடிபவை எவை?

23. அவ்வையாரின் அறவுரைகளை வகைதொகைப்படுத்தி விளக்குக.

24. அனைவரும் ஏற்கத்தக்கனவாக அற நூற் கருத்துகள் இயல்வதை நிறுவுக.

———————